DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
SPECIAL COURT UNDER THE NATIONAL INVESTIGATION AGENCY ACT, 2008
(SESSIONS COURT FOR EXCLUSIVE TRIAL OF BOMB BLAST CASES),
CHENNAI AT POONAMALLEE, CHENNAI – 56.

| **Spl.SC. No.** | **05/2024** | Deposition of | **P.W. 3** ( L.W. 6) |
|---|---|---|---|
| Name | Thiru.Ananda Kumar | Father's Name | |
| Street | | Village | |
| Taluk | | Age | |

Solemnly affirmed in accordance with the Provisions of Act of X of 1873 on the 23.02.2026.

**1 முதல் 3 வரையிலான எதிரிகள் ஆஜராகியுள்ளனர். 4 முதல் 7 வரையிலான எதிரிகள் ஆஜர்படுத்தப்பட்டுள்ளார். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜராகியிருந்தனர்.**

**முதல் விசாரணை தொடங்கிய நேரம் 12.06 p.m.**

நான் கடந்த எட்டு வருட காலமாக வரைவு அலுவலராக தமிழ் நாடு வீட்டு வசதி வாரியம், சென்னை சரகம், நந்தனத்தில் பணியாற்றி வருகிறேன். 17.8.2024 அன்று என்னுடைய மேற்பார்வை பொறியாளர் எனக்கு போன்கால் செய்து என்ஐஏ அலுவலர்கள் வரைவு பணிக்காக என்னை அழைப்பதாக காலை 9 மணிக்கு கூறினார். அதன்படி காலை 10 மணிக்கு நான் என்ஐஏ அலுவலகம், புரசைவாக்கத்திற்கு சென்றேன். அங்கிருந்த என்ஐஏ அலுவலர்கள் ராயப்பேட்டையில் உள்ள ஜானிஜான்கான் ரோட்டில் உள்ள இடத்தை ஆய்வு செய்து வரைபடம் தயாரித்து கொடுக்க வேண்டும் என்று கூறினார்கள். காலை 10.45 மணியளவில் நானும் சாட்சிகள் இருவரும் என்ஐஏ

அதிகாரிகளுடன் ராயப்பேட்டையில் உள்ள ஜானிஜான்கான் ரோட்டிற்கு சென்றோம். அவர்கள் காட்டிய இடத்தில் ஒரு கட்டிடம் இருந்தது. அவர்கள் காட்டிய இடத்தை ரோடோ மீட்டர் வைத்து அளந்து சுற்றியுள்ள இடத்தையும் அளந்து விவரங்களை சேகரித்துக் கொண்டேன். அங்கு மாதிரி வரைபடம் தயார் செய்தேன். பின்னர் என் அலுவலகத்திற்கு சென்று Auto Cad Soft Ware பயன்படுத்தி இறுதி வரைபடம் தயார் செய்தேன். அந்த வரைபடத்தை எடுத்துக் கொண்டு என்ஐஏ அலுவலகம் சென்று அங்குள்ள அதிகாரிகளிடம் ஒப்படைத்தேன். அந்த வரைபடம் **அதசா ஆ 8** (ஒரு தாள்) ஆகும். அந்த வரைபடத்தில் நான் கையொப்பமிட்டுள்ளேன். அந்த வரைபடத்தில் சாட்சிகளும் கையொப்பமிட்டுள்ளார்கள். அதற்கான செயல்முறை **அதசா ஆ 9** (ஒரு தாள்) ஆகும். அந்த செயல் முறையில் நானும் சாட்சிகளும் கையொப்பமிட்டுள்ளோம். என்ஐஏ அதிகாரிகள் என்னை விசாரணை செய்தார்கள்.

**முதல் விசாரணை முடிவடைந்த நேரம் 12.20 P.M.**

**குறுக்கு விசாரணை இல்லை.**

Typed down to my dictation in my presence and hearing and under my personal direction and read over to the witness in the presence of accused and admitted by the witness to be correct.

SUBRAMANIAN MALARVIZHI

Digitally signed by SUBRAMANIAN MALARVIZHI
Date: 2026.02.24 11:14:51 +0530

District and Sessions Judge.
Special Court under the National Investigation Agency Act, 2008,
Chennai @ Poonamallee.